
# ஆத்மஜோதி



"உன்னை உணர்ந்தாயாயின் உனக்கோருகுறையில்லை"
என்ற உபதேசம் அருளிய பொன்னப்பசுவாமி.



ஓம்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்.


| சோதி 6 | விஜய௵ பங்குனி௴ 1-ந் திகதி | சுடர் 5 |
|---|---|---|


## பொருளடக்கம்.


| விஷயம் | பக்கம் |
|---|---|
| ஸ்ரீ பொன்னம்பல..........திருமூலர் பாடல்கள் | 113 |
| ஸ்ரீ பொன்னம்பலசுவாமி தோத்திரம் | 114 |
| பங்குனி பூரமும் உத்தரமும் | 115 |
| இதயத்தை நம்பிய இயக்கம் | 118 |
| நிறைந்த பொருளே | [illegible] |
| ஆனந்தக்களஞ்சியம் ஆனந்தக்குமரம் | 122 |
| சாதுக்களும் உலகமும் | 126 |
| வழிபாடு | 128 |
| தேடிச்சேர்ந்த மணிவாசகங்கள் | 131 |
| ஆதி சங்கரர் | 133 |
| சௌரியப் மையார் | 136 |
| செய்தித்திரட்டு | 139 |



ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75. வருட சந்தா ரூ. 3.
தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்
60, டீல் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு
பதிப்பாசிரியர்:— நா. முத்தையா
ஆத்ம ஜோதி நிலையம். நாவலப்பிட்டி [சிலோன்]


# ஸ்ரீ பொன்னப்ப சுவாமிகளின் உபதேசங்களுக்கு அடிப்படையான திருமூலர் பாடல்கள்.

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரிய தோர் பேறிழந்தாரே.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயமாம்
வள்ளப் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்

பொன்னை மறைத்தது பொன்னணி பூரணம்
பொன்னில் மறைந்தது பொன்னணி பூரணம்
தன்னை மறைத்தது தனுகர ணங்களே
தன்னில் மறைந்தது தனுகர ணங்களே

முன்னைப் பிறவியிற் செய்த முழுதவம்
பின்னைப் பிறப்பினிற் பெற்றாலறியலாம்
தன்னை அறிவது அறிவாம் அஃதன்றிப்
பின்னை அறிவது பேயறி வாமே

தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனருளாலே

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனு மாமே

# ஸ்ரீ பொன்னப்ப சுவாமி தோத்திரம்.

செங்கனிவாய் மலர்ந்தமுதச் செழுந்தமிழால்
அரும் பொருள்கள் தெளித்தாய் போற்றி!
மங்கலமாம் வேதாந்த சித்தாந்த
சமரசத்தை வளர்த்தாய் போற்றி!
எங்கள் மயல் அறவீட்டி ஞானமருள்
வானெழுந்த நம்ப போற்றி!
துங்கமுறு சிவப்பொலிவே! பொன்னப்ப
தேசிகனே! தூயாய் போற்றி!

இருவினையொப் பென்பதனைச் சொல்லளவிற்
கேட்டிருந்தோம்; இனிது காண
இருவினையொப் பிதுகாண்டி ரெனச்செயலிற்
காட்டிநின்ற எழிலார் மன்னே!
அருவினையின் வயமான உடல் வருத்தம்
ஒருசிறிதும் அசைத்த தில்லை:
குருமணியே! பொன்னப்பக் கோமணியே!
குணமணியே! போற்றி! போற்றி!

சாதனங்க ளொருநான்குந் தெளியவைத்த
ஞானமலி தண்ணங் குன்றே!
வாதனைகள் கெடவளர்ந்த வல்லானே!
மன்பதைக்காய் மகிழ்ந்து வாழ்ந்த
போதகனே! புராணங்க ளுட்பொதிந்த
நுண்பொருளைப் புலப்படுத்தும்
மாதவனே! பொன்னப்ப மருத்துவனே!
மாநிதியே! போற்றி! போற்றி!

-ச. க. முருகேசு.





# பங்குனிப் பூரமும் உத்தரமும்.

(ஆசிரியர்)

பங்குனியானது காரைக்காலம்மையார்முதலாய ஐந்து சைவப் பெருமக்களின் குருபூசைத் தினங்களையும், வைஷ்ணவ சமயத்தொடர்பில் ஸ்ரீ ரங்கநாச்சியார் முதலாய ஆறு ஆசாரியார்கள், ஆழ்வார்களின் திரு நட்சத்திரங்களையும் கொண்ட மாசமாகும். இலங்கை வாழ் இந்துக்களைப் பொறுத்தமட்டில், பொன்னப்பசுவாமி, நவநாத சித்தர், பரமகுருசுவாமி, குழந்தை வேற்சுவாமி ஆகிய நால்வரின் குருபூசைத்தினங்களும் வந்து பொருந்துங் காரணத்தால், பங்குனி மாசம் ஓர் தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது. இந்த நால்வரின் நட்சத்திரங்கள் முறையே பூரம், உத்தரம், சதயம், உத்திரட்டாதியாகும்

பங்குனி மாசப் பூரணையும் உத்தரமும் கூடிய நாள் மிகவும் புனிதமான வேளையென்பது சைவ உலகு முழுவதும் நன்கறிந்த உண்மையாகும், உத்தரநாளுக்கு மறுபெயர் பற்குனி. இதிலிருந்தே பங்குனியென்ற மாதப்பெயர் வந்ததாகும். சித்திரை நட்சத்திரத்திலிருந்து சித்திரை மாதமும், விசாகத்திலிருந்து வைகாசி மாதமும், தோன்றிய முறையில், பங்குனி உத்தரத்தில் பிறந்தகாரணம் பற்றி அருச்சுனனுக்கு பற்குனன் என்ற நாமம் வந்ததையும் எண்ணுக. ஈழத்துச் சைவர்களுக்கு பங்குனி உத்தரம் ஓர் விசேடித்த புண்ணிய தீர்த்தநாளாகும். வண்ணை வைத்தீஸ்வரர், வல்வெட்டித்துறை வைத்தீசுரர், நல்லூர் நல்லநாதர், சுன்னாகம் ஐயனார், இணுவில் சிவகாமியம்மை, கண்டி செல்வ விநாயகர், திரிகோணமலை பத்திரகாளியம்மன், கொழும்பு பொன்னம்பல வாணேசர் ஆலயங்களில் தீர்த்தத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படும் நாள் இதுவே. அதற்கு முதல் நாளாகியபூரத்தில் குறிப்பிட்ட ஆலயங்களிலெல்லாம் தேர்த் திருவிழா நடைபெறும்.

இவ்விதம் இலங்கையின் நாலா பக்கங்களிலும் சைவமணம் கமழ்ந்து கொண்டிருந்த புனித நாள்களாகிய பங்குனிப்பூரத்திலும் உத்தரத்திலும் முறையே பொன்னப்ப சுவாமியும் நவநாதசித்தரும் மகாசமாதியடைந்தனர். முந்தியவரின் சமாதி வண்ணார்பண்ணை மேற்கு ஓட்டுமடத்திலுள்ளது; பிந்தியவரின் சமாதி நாவலப்பிட்டி

யை அடுத்துள்ள குயின்ஸ்பரித் தோட்டத்திலுள்ளது. பொன்னப்ப சுவாமியின் சமாதி விபரம் ஓர்பக்தனால் இயற்றப்பட்ட கீழ்க்கண்ட வெண்பாவில் அமைந்துள்ளது:-

**"சுக்கிலத்துப் பங்குனியிற் றோன்றும் வளர்பிறையாப்**
**புக்கபதின் மூன்றுதனு பூரம்போன்—மிக்கதினம்**
**பொன்னப்ப மாதவனற் பூரணன் விதேக முற்றான்**
**என்னப்ப னென்றிங் கிசை."**

பொன்னப்பர் கருவிலேயே திருவுற்றவர். அவரது தாயார் கடையிற் சாமியாரிடம் அளவற்ற பக்தி கொண்டு வாழ்ந்த புனிதவதி. அந்த மகானின் கடாட்சத்தினாலேயே பிறந்த குழந்தையானபடியால் பொன்னப்பருடன் ஞானமும் வைராக்கியமும் கூடவே பிறந்தனவெனலாம். பின்னாளில் அவர் வாக்கில் மலர்ந்த மணிவாசகங்களைக் கேட்டோர் அவற்றிற்கு அடிப்படையான ஞானப்பேற்றை எப்போது, எவரிடமிருந்து அவர் பெற்றனரென வியப்புற்றனர். கருவுற்றிருந்த போதே குருஉபதேசம் பெற்று விட்டனரெனக் கருதினர் கல்வியறிவிற் சிறந்த சிலர்.

உபநிடதங்கள், கீதை, வாசிஷ்டம், கைவல்யம், திருமந்திரம், புராண இதிகாசங்களின் நுட்பமான கருத்துக்களையும் தத்துவங்களையும், மக்களின் பக்குவத்திற்குப் பொருந்த அவர் எடுத்து விளக்கியமுறை மறக்க முடியாததாகும். அதனைப் பாராட்டிப் புகழ்ந்து ஓர் பக்தன் இயற்றிய நிலமண்டில வாசிரியப்பாவிலிருந்து சிலவரிகளைக் கீழே தருகின்றோம்:—

*"பொன்னப் பாயுயர் பொன்னப்ப மாமணி!*
*தன்னை மறந்து தலைவனைக் காணாது*
*சுழல்காற் சருகெனச் சுழன்று சுழன்று*
*பிறந்து மிறந்தும் பிணிப்புறு முயிரை*
*ஆமைமீன் பறவை யாமிவை போல*
*நினைப்பாற் பார்வையால் நேயமொடு தொடுகையால்*
*தடுத்தாட் கொண்டு தண்ணளி ததும்ப*
*அன்பொடு வாரியணைத்துத் தழுவி*
*அருணூல் பொருணூல் ஆன்றவர் துதிநூல்*
*இயனூன் முதலா வெத்திற நூலினும்*



*எடுத்துக் காட்டுக ளியம்பி நுண்பொருள்*
*வியப்பக் கூறி விளங்கச் செய்தலும்*
*ஒப்பின் வகையா லுண்மைகள் நுவன்று*
*கைப்படு நெல்லியெனக்கருத்தினுட் பொருத்தலும்*
*வேதாந்த சித்தாந்த சமரச மேவி*
*யார்யார் எதனை விழைவரே லதனைச்*
*சொல்லின் வாதத் துகளர் போலாஅ(து)*
*ஈடுமெடுப்பு மில்லா ஆற்ற லொடு*
*தெள்ளி வடித்துத் திறம்பெறக் காட்டியும்*
*உள்ளக்கோயில் ஒளித்திடுங் கள்வன்"*

இந்தப் பெரியாரை அவர் காலத்திலேயே யாழ்ப்பாணமக்கள் நன்கறிந்து கொண்டனர் என்று நம்பிவிடவேண்டாம். அறிந்தும் அறிந்தோனாகக் காட்டா ஆசானாய், சாத்திரஞ்சொல்லாது சித்திகள் எதுவும் செய்யாது, சர்வ சாதாரண ஏழை மனிதனைப்போல வாழ்ந்தஇந்த ஞானபுருஷனின் பெருமையை உணர்ந்தோர் மிகச்சிலரே அவரைப்போற்றியவர்களிலும் பார்க்க தூற்றியவர்தொகையே அதிகமெனலாம்.

எவ்விதம் சாயாஅன்பினை நாடொறுந்தழைப்பவர்கட்கு இறைவன் தாயே யாகி நிற்கின்றான் என்பதனை விளக்கவந்த மணிவாசகப் பெருமான், தாம் அருளிய போற்றித் திருவகவலில் அந்த மெய்யடியார்களின் தன்மைகளை மிகவும் அழகாக விபரித்துள்ளார். [*"கோடிறும் பேதையும் கொண்டது விடாதெனும்"* வரியிலிருந்து, *"தாயேயாகி வளர்த்தனை போற்றி"* என முடியும் வரையிலுள்ள இருபத்தைந்து வரிகளைக் கருத்தூன்றிக் கற்குக] இப்பாகத்திலடங்கிய, *"சகம் பேய் என்று தம்மைச்சிரிப்ப, நாணது வொழிந்து பூணதுவாகக் கோணுதலின்றிச், சதுரிழந்தறிமால் கொண்டு"* என்னும் விளக்கம் முற்றிலும் பொன்னப்ப சுவாமிக்கும் பொருந்தும் என்பது புகழ்ச்சியுரையாகாது. அவர் ஊராரின் வசை மொழிகளைக்கேட்டு வெட்கப்படவில்லை; அவற்றை ஆபரணமாகக் கொண்டாரே யன்றிச் சிறிதும் மனம்கோணவில்லை; அப்படித் தம்மைத் தூற்றியவர்களை வழிப்படுத்துவதற்கான உபாயங்களை இழந்து (சதுரிழந்து) நின்றது மாத்திரமன்றி, எல்லாம் அறிந்தும்அறியார்போல (அறிமால் கொண்டு) வாழ்ந்து சென்றனர். அவரது வாழ்க்கையில் மிளிர்ந்த இந்த அரும் பெருங் குணத்தைப் பேணுவதற்கு ஆர்வமுடன் முயல்வோமாக!

# இதயத்தை நம்பிய இயக்கம்.

[குன்றக்குடி அடிகளார்]

தமிழகத்தில் புதியதோர் மாற்றத்தைக்காண ஆசைப் படுகின்றேன். என்னுடைய இயக்கம் அறிவை நம்பியதுஅல்ல, இதயத்தை நம்பியது தான். அறிவு இதுவரை எதைக் கற்றுக் கொடுத்தது? பொய்சொல்ல-வாதம் செய்ய-சாமர்த்தியமாகப் பேச-கொலைசெய்யத்தான் கற்றுக் கொடுத்தது. தமிழகத்தின் இலட்சியம் அறிவை நம்பியதல்ல. அறிவு குழிதோண்டிப் புதைக்கப்பட்ட இடத்தில் தான் எங்களுடைய இலட்சியம் தோன்றுகிறது. நாங்கள் அறிவு என்னும் 'மைல்' கல்லைக் கடந்து அப்பாற்பட்ட அருள் என்னும் பேர் அமுதத்தைக் காண முயல்கின்றோம். அறிவு மனிதவாழ்க்கைக்கு உப்புப் போன்றது. அது கூடினாலும் ஆபத்து, குறைந்தாலும் அதனால் யாருக்கும் பயனில்லை. அறிவுமுற்றினால் பைத்தியக் காரத்தனம் என்பதைத் தோழர்கள் மறந்து விடவேண்டாம்.

## நன்கு தெரிந்து கையாளவேண்டும்.

கடவுள் தன்மையை மறுக்கும் பகுத்தறிவுத் தோழர்கள் தங்களுடைய கொள்கைக்குக் குதம்பைச் சித்தரையும், சிவவாக்கியரையும், இராமலிங்கரையும் இழுத்துப்பேசுகின்றார்கள். அவர்கள் பாடியபாக்கள் எங்கிருந்து எப்பொழுதுபாடப்பெற்றவை என்று பார்த்துச் சொல்ல வேண்டும். முன்பாடல்களிலும் பின்பாடல்களிலும் என்ன கூறப்பட்டுள்ளன என்று நன்கு தெரிந்து கொண்டபின்னர் தான் அவைகளைக் கையாளுதல் வேண்டும். அவர்கள் அருளாற்றல் பெற்றவர்கள், அவர்கள் எங்கும் கடவுளைக்கண்டார்கள், அதனால் அப்படிப் பாடினார்கள்.

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா நின்றன் கரிய நிறந்தோன்றுதையே நந்தலாலா" என்று பாரதி பாடினான். நானும் நீங்களும் காணமுடியுமா? அறிவுக்கு வேலை கொடுக்கும் தோழர்கள் அந்த இடத்தில் பிடிவாதத்தை விட்டு விடுங்கள். பிடிவாதம் இருப்பதனால் தான் உள்ளதை ஒப்புக் கொள்ள மறுக்கத்தூண்டுகிறது. மாந்தோப்பில் ஓர் எட்டிமரம் இருப்பதால் தோப்பு முழுவதும் எட்டி மரமாகிவிடுமா? கடவுள் தன்மையைக் குறை கூறும் நீங்கள், மறுக்கப்



புகுமுன்னர், அவைகளை முழுதும் படித்து விட்டுக்குறைகூற முற்படவேண்டும். உங்களுடைய சிறுமைப் புத்திக்கு-சிறுமைத் தனத்துக்கு-அவர்களையும் அழைத்து விடாதீர்கள். நீங்கள் எப்படியும் போங்கள்: அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அவர்களின் பெயருக்குத் தீங்கு செய்யாதிருந்தால் போதுமானது. சொன்னதைச்சாதிக்கவேண்டு மென்பதற்காக-பிடிவாத குணத்தால்உள்ளதை மறைக்க-மறுக்க முற்படாதீர்கள்.

## சாதிகிடையாது.

தமிழ் நாட்டுச் சமயத்திற் சாதி என்பது கிடையாது. சாதி உண்டு என்று இன்றைய பகுத்தறிவு வாதிகள் பிரசாரம் செய்கிறார்கள். சாதி-குலம்-கோத்திரம் என்பவற்றிற்கு எல்லாம் தமிழ் நாட்டுச் சமயத்தில் இடமில்லை. அவைகள் எல்லாம் அங்கு குழிதோண்டிப்புதைக்கப் பட்டுள்ளன, அவைகள் உண்டு என்று கற்பனை செய்து அவைகளைப் போக்க இவர்கள் பாடுபடுவதாகக்கூறிக்கொண்டு தங்கள் பிழைப்புக்கு வழிதேடுகின்றார்கள். அதனால் தங்களது கொள்கைக்குப் பிரசாரம் செய்து கொள்கின்றனர்.

## நாத்திகத்துக்கு இடமில்லை

தமிழ் நாட்டு இலக்கியங்களில் நாத்திகத்திற்கு இடமில்லை இவர்கள் காட்டுகின்ற ஆதாரம் அத்தனையும் மேல்நாட்டார்களின் இலக்கியங்களில் இருந்துதான். அவர்களும் உண்மைச் சமயத்தைக் கண்டித்தார்களில்லை, சமயத்திற்காணப்பட்ட குறைபாட்டைத்தான் கண்டித்தார்கள். அவைகளை நன்கு புரிந்து கொண்ட பின்னர் மறுப்பதும் அவைகளுக்கு ஆதாரம் காட்டுவதும் நல்லது.

## நமது இதய கீதம்.

தமிழை, தமிழ்நாட்டை வளர்ப்பதாகக் கூறுகின்றார்கள். அவர்கள் கூறுவது உண்மையாக இருந்தால் இதுவரை தமிழகத்துக்கும் தமிழ் இலக்கியங்களுக்கும் என்ன செய்தார்கள், அவற்றைத்தான் நன்கு முழுதும் படித்துணர்ந்து வாழ்வில் பயன்படுத்தக் கற்றுக் கொண்டார்களா என்றால், இல்லைத்தான். எல்லாம் சொல்லோடு

சரி. நாம் எல்லோரும் உறங்கியது போதும்: இனி உறங்குதல் கூடாது. நம்முடைய லட்சியத்தில் நிரந்தரமான பிரார்த்தனைதான் எதனையும் சாதித்துக் கொடுக்கும். அவைகள்தான் நமக்கு நல் வாழ்வு அளிக்கவல்லன. ஆண்டவனிடம் மனத்தையும், மக்கட் சமுதாயத்திற்கு உடல் உழைப்பையும் கொடுக்க எல்லாரும் முன் வருதல் வேண்டும். 'அன்பே சிவம்' என்பது நமது இதய கீதம். அன்பின் வழி நின்று அருளின் துணைகொண்டு அறத்தைப் பேணிக் காத்து மக்கட் சமுதாயத்திற்குத் தொண்டாற்றவேண்டும்.

## வாழ்ந்திடும் வழியருள்வாய்!

எடுப்பு

வாழ்ந்திடும் வழியருள் வாய்--புனிதனுக [வாழ்]

தொடுப்பு

ஆழ்ந்திடா தகந்தையில், அழியாது காமத்தில்,
காந்தமாம் உன்னடி சார்ந்துபே ரின்பனுய் [வாழ்]

முடிப்பு

பக்தி யெனும் வலையால் சுத்தன் உனைத்தொடர்ந்து
பற்றிப் பிடிப்பதற்கும் கற்றறி யேனையே!
சித்தத் தொளிரு முனைத் தியானமோ னஜபத்தால்
தெளிந்துகலந்திடவும் வலிமையில்லாச்சிறியேன் [வா]

"பரமஹம்ஸதாஸன்"

## குகாஞ்சலி

குமரா! அழகுக்கு அழகு நீ: மணமும், இளமையும் உன்னிடமிருந்தே தோன்றுகின்றன; நீயே எல்லாமான பரமன்: ஆனாலும் அன்பும் தியாகமும் சேவையும் உருக்கொண்டு வந்த வள்ளிக்கு நீ மிகவும் எளியவன்; நான் உன்னை அடைய ஆசைப்படுகிறேன்: அறியாமையால் மருண்ட என்னைத் தேற்றி உன் திருவடி மலர் தந்து. பக்தி பெருகிப்பாட உள்ளும் புறமுமாக நின்றருள வேண்டும் அப்பா! வருவாய்! வருவாய்!!



ஓம்
ஸ்ரீ ராமகிருஷ்ணுய:

## நிறைந்த பொருளே!

எடுப்பு.

நீக்கமற நிறைந்த பொருளே! - பேதை
வாழ்க்கை மலரக்கடை நோக்கம் புரிந்தருளே! [நீக்க]

தொடுப்பு.

வாக்கில், மனத்தில், தூய வாழ்வில், செயலில், அன்பர்
நோக்கு மிடத்திலெல்லாம் ஆட்கொண் டருள் புரிய [நீக்க]

முடிப்பு.

அகத்திலும் புறத்திலும், சுகத்திலும் துயரிலும்,
அருளிலும் பொருளிலும், இருளிலும் ஒளியிலும்,
மகத்திலும் அணுவிலும் மிகத்தெளி வொடு மலர்
வனப்புடன் அனைத்திலும் இனிப்புடன் உயிர்த்திடும்
(நீக்க)

## ஆண்டருள்!

எடுப்பு.

ஆண்டருள் ஜெகதீசா! - அடிமையெனை [ஆண்டருள்]

தொடுப்பு

மீண்டும் கருக்கடல் வீழ்த்திடா துன்னருட்
தாண்டவத் தேன்பதத் தாசனுய் என்றென்றும் (ஆண்ட]

முடிப்பு.

அப்பரைப் பிள்ளையாரை அழகிய சுந்தரரை
அருள்மணி வாசகரைக் கருணைத்தா யுமானுரை
எப்படி யுன்னருள் இச்சைக்கா ளாக்கினையோ
எந்தையே அப்படியே ஏழையை யும்உவந்து [ஆண்ட]

"பரமஹம்ஸதாஸன்"

## ஆனந்தக்களஞ்சியம், ஆனந்தகுடீரம்.

*[சுவாமி, இராமானந்தஸரஸ்வதி ஆனந்தகுடீர்.]*

### இஷ்ட பூர்த்தி!

தினம் காலை 9 மணிக்கு ஸ்ரீ சுவாமி சிவானந்தர் தெய்வநெறிக் கழகக் காரியாலயத்திற்கு வருவார். பகல் 11 மணி வரை தங்கி ஆஸ்ரமத்திற்கு வரும் கடிதங்களைப் பார்ப்பார். அப்பொழுது நீங்கள் அவரைத் தரிசிக்கலாம். நீங்கள் அவரிடம் பேச விரும்பினால் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளாமல் வெகு சில வார்த்தைகளிலேயே உங்களுடைய விருப்பம் முழுவதையும் அவருக்குத் தெரிவித்து விடுங்கள். இவ்வாறு செய்வதால் உங்களுடைய இச்சையும் பூர்த்தியாகும். அவருக்கும் அவருடைய பல்வேறு வேலைகளைக் கவனிக்கப் போதிய அவகாசம் கிடைக்கும். ஆகஸ்ட் மாதத்தில் குருபூர்ணிமா தினத்தன்றும், செப்டம்பர் மாதத்தில் ஸ்ரீ சுவாமிஜீயின் பிறந்ததினத்தன்றும், பிப்ரவரி மாதத்தில் சிவராத்திரி தினத்தன்றும், தகுந்த யோக்கியதையுடையவர்கள் பிரமசாரி தீக்ஷையையும் சன்னியாச தீக்ஷையையும் பெற்றுக் கொள்வார்கள். மற்றவர்கள் ஏதாவதொரு சுபதினத்தன்று அல்லது குருவாரத்தன்று மந்திர தீக்ஷையைப் பெற்றுக்கொண்டு குருபூஜையும் செய்வார்கள். இப்பூஜையில் யாவரும் கலந்து கொள்ளலாம்.

### ஆத்துமீக உத்தாரணம்.

பாமர ஜனங்களுக்குப் பலவித யோகங்களை எளிய முறையில் படங்கள், உருவங்கள், பொருள்கள் மூலம் விளக்கிக் காட்டுவதற்காக ஸ்ரீ சுவாமி சிவானந்தர் யோக காக்ஷிச் சாலையை ஏற்படுத்தியுள்ளார். இங்கு அரைமணி நேரத்தில் யோகத்தைப்பற்றியுள்ள சகல அங்கங்களையும் பரிபூரணமாகக் கற்றுக் கொள்ளலாம். தெய்வநெறிக்கழகக் காரியதரிசி அல்லது யோக வேதாந்த ஆரண்ய சர்வகலா சாலைப் பேராசிரியர்களில் ஒருவர் இதைஉங்களுக்கு விளக்கிக்காட்டுவார். இதன் பின், ஆஸ்ரமத்தின் இதர நடவடிக்கைகளையும் காரியதரிசி, உங்களுக்குக் காண்பிப்பார்.

ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் அரிய உபதேசங்களை நேராகப் பெற்று அவர் முன்னிலையில் தங்களுடைய ஆத்மீகச் சாதனையைக் கிரமமாகத் தொடங்க வேண்டுமென்று சாதகர்கள் நூற்றுக்கணக்காக



ஈஸ்டர், கிறிஸ்துமஸ் வாரங்களில் இந்தியாவின் வெவ்வேறு பாகங்களிலிருந்து திரள் திரளாக வந்துகூடுவர். அப்பொழுது சாதகர்களுக்கு ஆத்துமீகப் பயிற்சி தீவிரமாக அளிக்கப்படும். ஸ்ரீ சுவாமிஜீயின் பிறந்த தினத்தையொட்டியும் ஜனங்கள் ஏராளமாக சுவாமிஜீயின் தரிசனத்திற்காக இங்கு வருவார்கள். அப்பொழுதும் (செப்டம்பர் முதல் தேதியிலிருந்து 8ந் தேதி வரை) சாதகர்களின் நன்மைக்காக விசேஷ சத் சங்கங்களும் ஆத்மீகப் பயிற்சிகளும் நடைபெறும்.

இங்கு பக்தி, யோகம், வேதாந்தம் முதலிய விஷயங்களைக் கொண்ட புத்தகங்கள் ஏராளமாக இருக்கின்றன. இவைகளைத்தவிர "தெய்வ நெறி" "ஞான ஒளி" "இறைவனை அடையவழி" "ஆரோக்கியமும் நீண்ட வாழ்க்கையும்" என்ற ஆங்கில மாதப் பத்திரிகைகளும், 'யோகமும் வேதாந்தமும்" என்ற ஹிந்தி மாதப்பத்திரிகையும், யோக வேதாந்த ஆரண்ய சர்வகலாசாலையின் ஆங்கில வாரப் பத்திரிகையும் இங்கு வெளியாகின்றன.

மேலும் இங்கிலீஷ் சிகிச்சைமுறை (**Allopathy**), ஹோமியோபதி (**Homeopathy**) சிகிச்சை முறை, இயற்கைச்சிகிச்சை முறை— இவைகளில் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் ஆயத்தமாய் இருக்கிறார்கள். நோயாளிகள் தங்களுக்குப் பிடித்தமான எந்தச் சிகிச்சை முறையையும் பின்பற்றலாம். இச்சிகிச்சை முறைகளுக்கேற்ப தனித்தனி சிகிச்சை சாலைகள் ஆசிரமத்தில் இருக்கின்றன. இதைத் தவிர "நாமோபதி" என்ற அற்புதமான மந்திர சிகிச்சை முறையும் அளிக்கப்படுகின்றது.

மூளை சம்பந்தமான வியாதிகளுக்கும், இரத்த சுத்திக்கும், வேறு குறிப்பிட்ட வியாதிகளுக்கும் சிறந்த மருந்துகள் ஆயுர்வேத மருந்துச்சாலையில் கிடைக்கும். இவைகள் இமயமலையில் கிடைக்கும் சுத்தமான மூலிகைகளைக் கொண்டு தயார் செய்யப்பட்டன.

### ஞானப்பிரசாரம்.

ஸ்ரீ சுவாமி சிவானந்தர் லட்சக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள புத்தகங்களை தகுந்தயோக்கியதையுள்ள சாதகர்களுக்கும், பொது ஜன புத்தக சாலைகளுக்கும் கல்வி நிலையங்களுக்கும் வழங்கி வருகிறார். தெய்வநெறிக் கழக அரியவெளியீடுகளின் மூலமும், மனதுக்கு

ஆறுதலை அளிக்கும். ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் கைப்பட எழுதிய கடிதங்களின் மூலமும் உலகமுழுதும் சாதகர்கள் நன்மையை அடைந்து வருகின்றனர். கல்வியிற் சிறந்த பண்டிதர்களிடம் அநேக வருஷங்கள் கஷ்டப்பட்டுப் படித்து அறிந்து கொள்ளும் விஷயத்தை அல்லது தனிமையாகப் 12 வருஷங்கள் கஷ்டப்பட்டு சாதனை செய்து அடையும் பலனை ஆனந்த குடீரில் சிலதினங்களிலேயே கற்று விடுகிறார்கள். இங்கு வந்து ஆத்மீகப் பயிற்சியைப்பெற இயலாதவர்கள் கடிதப்போக்குவரத்தின் மூலம் இதே நன்மையை அடைகிறார்கள்.

### அரும் பெரும் பாக்கியம்.

ஆஸ்ரமத்தில் சாதகர்களுக்கு அவரவர் யோக்கியதாம்சங்களுக்குத் தகுந்தாற்போல் வேலைகள் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. சிறந்த படிப்பாளிகளுக்குக் கட்டுரை எழுதுவதிலும் உபந்நியாசம் செய்வதிலும் மற்றவர்களுக்கு வேறுவேலைகளிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றன. எனினும் சாதகர்கள் அவர்கள் இஷ்டம் போல் எந்த வேலையையும் செய்து பழகிக் கொள்ளலாம். ஸ்ரீ சுவாமிஜீயுடன் நெருங்கிய தொடர்பை வைத்துக் கொள்ள சேவையே முக்கிய சாதனமாகும். இதன் மூலம் ஸ்ரீ சுவாமிஜீக்கும் சாதகர்களின் வேலைத்திறமையையும் மனப்போக்கையும் அறிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இந்நெருங்கிய தொடர்பின் மூலம் சாதகர்களுக்கு வெகு சீக்கிரத்தில் ஆத்மீக முன்னேற்றம் ஏற்படுகிறது.

ஏதாவதொரு வேலையை நிதானமாகச் செய்வதின் மூலம் சாதகர்கள் இந்திரியங்களைக் கட்டுப்படுத்தவும் ஏகாக்கிர சித்தத்தைக் கொள்ளவும் பழகிக் கொள்கிறார்கள். சுயநலம் கருதாது வேலை செய்வதின் மூலம் தங்களுக்கே தெரியாது மறைந்து கிடக்கும் வேலைத்திறமையை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பம் வாய்க்கிறது. மேலும் சித்த சுத்தியும் ஏற்படுகிறது. ஆத்மீக முன்னேற்றமடைய சித்த சுத்திதான் முக்கிய அடிப்படை. மனவேறுபாடுடைய பலவித சாதகர்களுடன் பழகுவதால் மனோபக்குவத்திற்கும் சூழ்நிலைக்கும் தகுந்தாற்போல் தங்களையும் அமைத்துக் கொள்ளப்பழகிக் கொள்கிறார்கள். சாதகர்களுக்குத் தங்களிடம் உள்ள குறைகளை நீக்கி தெய்வீக குணங்களை தங்களிடம் அமைத்துக் கொள்ள இதுவே சிறந்த எளிய மார்க்கம்.



ஆஸ்ரமத்தில் வசிப்பவர்களின் சௌகரியங்களை சுவாமிஜீ தானே நேரில் வந்து கவனிக்கிறார். ஆத்மீகத் துறையில் தன்னை நாடுபவர்களுக்கு அவர் மிகுந்த உற்சாகத்தைக்காண்பித்து, படிப்படியாக அவர்களை மேலே தூக்கி விடுகிறார். எப்பொழுதும் மனதை அந்தர் முகமாகவே திருப்பி, ஆத்தும சிந்தனையிலேயே இருப்பவர்களுக்கு, மனப்போக்குக்கு அனுசரணையாக ஏகாந்த இடத்தில் இருந்து தியானம் செய்வதற்குண்டான வசதிகளையும், பக்தி யோக சாதனையைச் செய்பவர்களுக்குத் தேவையான வசதிகளையும் அளிக்கிறார். பக்தி யோக சாதனையைப் பழகுபவர்கள், கோவில் வழிபாடு அகண்ட கீர்த்தனம், இரவு சத்சங்கம் முதலியவைகளில் பங்கெடுத்துக்கொள்ளலாம். இவைகள் எல்லாம் பக்தியை வளர்க்க வல்லன. சாதனையில் நன்கு தேர்ச்சி பெற்ற சாதகர்கள் ஆங்காங்கு ஜனங்களிடையே சாந்தியையும் சந்தோஷத்தையும் பரப்புவதற்காக நாடு முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்கள். யாத்திரீகர்கள் இந்த சில நாட்கள் தங்கி பயிற்சி பெற்று திரும்பி அவர்கள் ஊர் போய்ச் சேர்ந்த பிற்பாடு ஜனங்களின் நன்மைக்காக ஆங்காங்கு தெய்வநெறிக் கழகக் கிளைஸ்தாபனங்களை ஏற்படுத்தி தலைமைக் காரியாலயத்தில் உள்ள நடவடிக்கைகளைப்போல் அந்த ஸ்தாபனங்களிலும் நடவடிக்கைகளைக் கையாண்டு வருகிறார்கள்.

தாராள மனப்பான்மையுடைய பக்திமான்கள் தங்கள் பெயரில் தங்களுக்காகவோ அல்லது சாதகர்களுக்காகவோ அல்லது மகாத்மாக்களுக்காகவோ குடியிருக்க ஆஸ்ரமத்தில்கட்டிடங்களைக் கட்டுகிறார்கள். எங்கு பார்த்தாலும் மனதிற்கு ரம்மியமான இமயமலைக்காக்ஷிகள் சூழ, மிகப் புனித நதியான கங்கை நதிக்கரையிலே தவம் செய்வதற்காக இம்மாதிரி குடிசைகளை அமைத்துக் கொடுப்பது சிறந்த தர்மமாகும். ஆத்மீக விஷயங்களைப் பரப்புவதற்காக நன்கொடையாளர்கள் யோகவேதாந்த ஆரண்ய சர்வகலாசாலை அச்சுக் கூடம் மூலம் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுகிறார்கள். இப்பிரசுரங்கள் யாத்திரீகர்களுக்கு இனாமாக அளிக்கப்படுகின்றன.

பிறர்க்கு சேவை செய்ய தனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் ஸ்ரீ சுவாமிஜீ உடனே அதைப் பயன் படுத்திக் கொள்வதற்காக ஆனந்தம் ததும்ப துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடிவருவார். இவர்

## சாதுக்களும் உலகமும்.

*[சித்தனனந்த ஸரஸ்வதி]*

தைவீக விஞ்ஞான ஆராய்ச்சியின் முக்கிய கருவி மனமானதால் வெளிப் புலன்களிலிருந்து புலன்களை விட்டு மனதுஉள்நோக்கிச்செல்லுங்காலம் தான் தைவீக இரகஸ்யங்களின் தன்மை சிறிது சிறிதாகத் தெரியவரும். பூரண சத்வ குணத்தை சம்பாதித்து, வெளிப்புலன்களிலிருந்து மனதை உள்பக்கம் திருப்புவது அவ்வளவு எளிதில் ஆகாததென்பது பரீக்ஷித்தால் யாவருக்கும் தெரியவரும்- பலஜென்மங்களில் செய்த புண்ணிய பலனுலேயே ஒருவனுக்கு சத்துவ குணம் கிட்டுகின்றது இவ்வழியில் பூரண சத்துவகுணத்தால் மனதை அடக்குவது ஒரே ஜன்மத்தில் சாத்தியமாவது கூடக்கடினம். ஆதலால் இத்தகைய கடினமான ஆராய்ச்சி உலக மத்தியிலிருந்து செய்வது பயனில்லாமல் போகுமாதலால்தான் உலகத்தைவிட்டுத் தனி இடம் அமைத்துக் கொள்ளுகிறுர்கள்.

உண்மை சாதுக்களுக்கு எளிய உணவும், எளிய உடையும், ஒரு சிறிய குடிசையும், ஏதாகிலும் முன்னோர்களால் ஆராய்ந்து எழுதிவைத்த இரண்டொரு நூல்களுமே தான் தேவை. இந்தச்சாமான்களுக்காக அவர்கள் ஒருவரையும் வற்புறுத்தி தொந்தரவு கொடுக்கமாட்டார்கள். தொந்தரவு கொடுக்காத வகையில் கேட்டு விட்டு கிடைத்தால் ஏற்றுக் கொள்வார்கள். இல்லாவிட்டால் விபரீதபாவனையின்றிப் போய்விடுவார்கள். சாதுக்கள் தங்கள் உடலைப் பற்றிப் பயமற்றவர்களாகவும், உலகக் குழப்பங்களால் மக்களின் துன்பங்களில் அனுதாபமுள்ளவர்களாகவும் இருப்பார்கள்,

---

*முற்பக்கத் தொடர்ச்சி.*

ஜனங்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்றே வெவ்வேறு விதமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறுர். ஜனங்களிடையே அமைதியையும் சுபிக்ஷத்தையும் நிறுவ இவர் நீடூழி காலம் வாழ்வாராக! நமக்கு குருநாதரிடம் பூரண விசுவாசமும் நம்பிக்கையும் ஏற்பட்டு அவருக்கும் நமக்கும் நெருங்கிய தொடர்பும் ஏற்பட்டு, நமது வாழ்க்கையின் இலக்ஷியத்தை வெகு எளிதிலும் சீக்கிரத்திலும் அடைவோமாக!

ஓம் சாந்தி;! ஓம் சாந்தி;!! ஓம் சாந்தி;!!!



இத்தகைய கடின பயிற்சியால் ஆராய்ந்தறிந்து மகான்களால் எழுதிவைத்த நூல்கள் இன்றும் நம் வாழ்க்கையின் தத்துவங்களை நமக்கு காட்டி வருகின்றன. இத்தகைய உயர்ந்த தைவீக தத்துவங்கள் நமக்குக் கிடைக்காவிட்டால் மனிதசமுதாயம் முன்னேற்றமின்றி ஆடுமாடுகள் போல் மிருகப்பிராயமாக வாழவேண்டியதென்பதில் சந்தேகமிராது.

முற்போக்கான காரியங்களைத் தாறுமாருகச் செய்து விட்டு மனக்குழப்பங்களால் தவிக்கும் காலங்களில் சாஸ்திர வாக்கியமோ அல்லது சாதுக்களின் உபதேசமோ பேருதவியாய்வருவதை அநுபவத்தாலறியலாம். உலக வழக்குகளிலும், ராஜிப்போராட்டங்களிலும், சமரஸமும் சாந்தியும் ஏற்படுவதற்கு சாஸ்திர வாக்கியமும் மகான்களின் உபதேசமுமே சஞ்சீவினியாக உதவுகின்றன, பகவத்கீதையும், திருக்குறளும் எந்தக்குழப்பங்களுக்கும் தீர்ப்புக்கொடுத்து சாந்தியைத் தருகின்றன பெரும் கொடுமை, பஞ்சம், பிணி இவைகளால் சூழ்ந்திருக்கும் தற்கால உலகத்திலும் கூட ஏதோ மூலையில் இருக்கும் புண்ணியாத்மாக்களாகிய சாதுக்களின், சத்வகுண ஒலி ஆகாயத்தில் பரந்திருப்பதால் தான் உயர்ந்த தத்துவங்கள் அழியாமலும், அமைதியின் தன்மை மங்கிப் போகாமலும் இருக்கின்றன. "சத்வ குணத்தால் மேன்மையைப்பெற்ற மகான்கள், தங்கள் தங்கள் சக்தியைக் கொண்டு, அஞ்ஞானிகளைத் திருத்துகின்றனர், துன்பம், வியாதி, பயம் இவைகளால் கலங்கி இருப்பவர்களின் கலக்கத்தைப் போக்கி தைரியத்தை அளிக்கின்றனர். உண்மையான சாது, ஒருவனுக்கும் துன்பம் கொடுப்பதில்லை, எவ்வித பிராணிகளும் அவனைப்பார்த்து பயமும் கொள்வதில்லை,

*"அபயம் ஸர்வ பூதேப்யோ தத்வாசரதி யோமுனி:*
*நதத்ர ஸர்வ பூதேப்யோ பயமுத்பத்ய தேக்வசித்"*

(நாரதபரிவ்ராஜகோபநிஷத்)

இத்தகைய உயர்ந்த சாதுக்களின் பெருக்கத்தையே உலகம் விரும்பவேண்டியது கடமை.

ஓம் சாந்தி:! ஓம் சாந்தி;!! ஓம் சாந்தி:!!!

# வழிபாடு

(ரா. வரத நாராயணன்.)

உலகப்பொருளை உபசரித்தலால் கடவுள் நிறைவெய்தி விடுகிறார் என்று கொண்டால் அந்தச் சக்திக்கும் விருப்பு வெறுப்பு முதலான குணங்களுண்டு என ஏற்படுகிறதல்லவா? அப்படி அல்ல. விருப்பும் வெறுப்பும் தீர ஒழித்த ஞானியரிடம் உபதேசம்பெற விரும்புவோர் அவருடைய தூலதேகத்தைக் காணுமலே ஞான உடல் கண்டு நன்மையடைய முடியாதோ – அவருக்குத் தன் உடம்பின் மேல் பற்று இல்லாவிடினும் நல்லதை விரும்பும் நாம் அவருடைய சரீரத்தோடு பழகி உறவு கொண்டாடுவோமோ – அப்படியே வேண்டுதல் வேண்டாமை இல்லாத இறைவன் உறையும் திருவுருவங்களை நினைத்துத் தொழுவது இன்றியமையாதது.

உலகில் அசுத்தம்-சுத்தம் என இருவகைப்பொருள்கள் அடங்கியுள்ளன. ஆண்டவனுக்கு இந்த இரண்டும் சமமே வைரக் கல்லுக்குத் தனி மதிப்பும் கூழாங்கல்லுக்குத் தாழ்ச்சியும் அந்தச் சக்தியிடம் வேறுபாடில்லை எனப் பெரியோர்கள் கண்ட முடிபு. ஆயினும், கடவுள் பேரில் கொண்ட அன்பினுல் மனித உள்ளம் வைரமாகவே இருக்கட்டும் என நினைப்பது மனித இயற்கை.

இனி உலகத்தில் அடங்கியுள்ள எல்லாப் பொருள்களும் ஐம்பூதங்களின் சேர்க்கையால் மட்டுமே இருக்கின்றன ஆதலால், ஈசனைவழிபட அந்த ஐவகைப் பொருளாலேயே செய்யலாம் என்பது தெளிவு. இந்தத் தத்துவத்தை உணர்த்தவே "பஞ்சபூத"க்ஷேத்திரம் எனச் சொல்லும் ஐந்துதலங்களை நம்முன்னோர்கள் ஏற்படுத்தி வழிபாடுசெய்த பெருமை தமிழ் நாட்டிற்கேதான் உரியது.

இவ்விதமான வழிபாடு மிகவும் கஷ்டமானது. எளிதாக உள்ள சாதாரண மக்களின் மனதிலே–அன்றாடச் சிக்கல்களில் சுழலும் வேகத்தில் மேற்சொன்ன விஷயங்களை நினைத்துப்பார்க்க முடியாது என உணர்ந்த ஞானியர்கள், இலகுவாக இறைவனின் நினைவு ஏற்பட விக்கிரக ஆராதனைகளை ஏற்படுத்தி அதற்கு உரியன வான ஒழுங்கு முறைகளையும் வரையறவு செய்து தந்துள்ளார்கள். இதை



இகழும் நிலை இரங்கத்தக்கது. இழிவானதும் கூட.

"எங்குமுளன் கண்ணன்" என்று கருதும் ஞானியர்கள் உலகின் உயிர்த் தொகுதியையே இறைவனுக வழிபட்டு விடுவார்கள். அந்த நிலைவர எத்தனையோ பெரும் தவம் செய்திருந்தாலன்றிக் கைகூடாது. இந்த முறையில் இறைவனை வழிபடுவது தான் விவேகவழிபாடு எனப்படும்.

இனி இரண்டாவது வழிபாட்டைக் கவனிப்போம் ஏகலைவன் துரோணரிடம் வில்வித்தை கற்கஆசைப்பட்டான் அவரிடம் போய் தனக்கு வில்வித்தை கற்பிக்கும்படி கேட்டான். துரோணர் கேவலம் ஒரு வேடச்சிறுவனுக்கு ஆசிரியராக இருக்க விருப்பங்கொள்ளவில்லை. கற்பிக்க மறுத்தார் இருப்பினும் ஏகலைவன் தளர்ந்து தன் முயற்சியை விட்டு விடவில்லை. இரகசியமாகப் பாண்டவர்க்குச் சொல்லித் தரும் பொழுது கவனித்து வந்தான். தன்வீட்டில் துரோணர் போல் சிலை அமைத்து, அதன் முன் மனம் குவிந்து பக்தியுடன் வணங்கி, அவரே எதிரில்இருந்து சொல்லிக்கொடுப்பதாகப் பாவனைசெய்து கொண்டு வில்வித்தையில் பூரணுகைப்பெற்றுன், சில நாளில் ஏகலைவனைப்போல் வில்லாளி இல்லை யென்னும்படி நிகரற்று விளங்கினுன் இதுவரையில் நாம்விளக்க எடுத்துக்கொண்ட உபமனத்திற்கு இச்சதை போதும். ஏகலைவன் துரோணரின் சிலை அமைந்து முடியும் வரை 'சிலை" என்று எண்ணி இருப்பான். உருவம் முடிவடைந்து துரோணரின் தியானம் மனதில் திடப்பட்டு நிலைத்தவுடன் "சிலை" என்ற நினைவே ஒழிந்து அவரே எதிரில் இருப்பதாக நினைத்தான் இது இன்றைய பகுத்தறிவு வாதிகளுக்குப் பச்சைப் பொய்யாகத் தோன்றலாம், பாவனு சக்தியின் மாண்பு உணர்ந்த பெரியோர்களுக்கு இது ஒரு இன்னமுது. ஏகலைவனைப் போல் பாவனு சக்தி யுள்ளவர்களுக்கு துரோணர் என்னும் உயர்வான எண்ணத்தைத் தவிர சிலை, பொம்மை என்ற எண்ணம் தோன்ற இடமேயில்லை சலனமற்ற பாவனை அத்தகைய சக்தியுடையது பாவனை முதிரவே விக்கிரகம் அவசியமாகிறது இதுவே விவேக வழிபாட்டின் மாளிகையைத் திறக்கும் மூடபக்தி என்னு திறவு கோலாகும்.

ஏதாவது, ஒரு ஜடப்பொருளில் ஒரே பாவனையின் முதிர்ச்சியில் இறைவனைத்தோற்றுவித்துக்கொண்டு வழிபடலாம். கண்காண்பது சிலையே ஆனுலும் உள்ளத்திலே இறை உணர்வு முதிர்ந்திருந்தால் கற்சிலை என்ற எண்ணமே எழ இடமில்லை. இவ்

வுணர்ச்சி முதிர்வில் வழிபடுபவன் தன்னை மறந்து அதே ஆகிவிடுகிறான். வழிபாட்டின் ரகசியமே அவனுடன் ஒன்றி விடுவது தான்.

இங்கு கண்ணப்பனின் வரலாறும் நினைவு கொள்ளத் தகுந்தது. காட்டிலே வேட்டையாடித் திரிபவன் கண்ணப்பன், அவன் தன் தோழர்களிரண்டு பேருடன் வேட்டையாடித்திரிந்து வெகு தூரம் சென்றான். அப்போது காளஹஸ்திகிரி ஆலயத்தின் மணியோசை அவனால் கேட்கப்பட்டது. தன்னுடன் வந்தவர்களிடம் “அது என்ன சத்தம்?” என்று கேட்டான். “அங்கு ஒரு ஆலயம் இருக்கிறது அங்கிருந்து வரும் மணியோசை அது'' என்றனர். “ஆலயம் என்றால் என்ன? அங்கிருப்பது யார்?'' என்று கேட்டான். அதற்கு அவர்கள், “அங்கு தெய்வமிருக்கிறது. அவருக்குப் பூசை நடக்கும் பொழுது மணியடித்து. மேளம் வாசித்துச் சிறப்புச் செய்வார்கள்.” என்றார்கள். கண்ணப்பன், தெய்வம் என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? எதற்காக அவனுக்குப் பூசை? எனவினவினான், கூட வந்தவர்கள் திருவிழாக்காலங்களில் தாங்கள் கண்டபடி, அந்தத் திருஉருவத்தை வருணித்துக்கூறினார்கள். “கண்ணப்பா அவனுக்குப் பளபளப்பான உருவமிருக்கிறது, சிவன் என்றுபெயராம், அவருக்கு ஒப்பாருமிக்காருமில்லையாம். வணங்கியவர்க்கெல்லாம் நல்லது செய்கிறாராம். ஆகையால் அவரைப்போற்றி ஆலயத்துள் வைத்துவணங்குகிறார்கள்.'' என்று அவர்கள் சொல்லும் பொழுதே, திருவுருவம் தன்முன்னிற்கும்பாவனை ஏற்பட்டு விட்டது, ‘ஆகா! இத்தகையவன் இந்தக் காட்டிற்குள் தன்னந் தனியனாக அல்லவா இருக்கிறான்? நாம் போய்ப்பார்த்து வரவேண்டும்’ என்று எண்ணியபடியே கூடவந்தவர்களையும் மறந்து மணியோசை கேட்ட வழியே சென்று ஆலயத்துட்புகுந்தான். சிவனையே தான்கண்டான். சிலை என்ற எண்ணம் தோன்றாமல் பாவனை என்னும் சக்தி அவனை ஆட்கொண்டது. தினசரி தான் தனியாகப் பூசைமுதலியன நடத்தி வந்தான். ஒரு நாள் சிவத்தின் கண்ணொன்றில் இரத்தம் வடியவாரம்பித்தது. கண்ணுற்ற அவன் மனது இளகியது. தன் கண்ணொன்றை அம்பின் முனையால் பெயர்த்து குற்றமடைந்த கண்ணில் வைத்தான். ஆனால், மறுகண்ணிலும் உதிரம் வரக்கிளம்பியது. தன்இரண்டாவது கண்ணையும் பெயர்த்து வைத்து விட்டான், பாவனையின் உயர்ச்சியால் தன்னையும். மறந்து சமாதி நிலையில் நிற்கவே. கண்



# தேடிச்சேர்த்த மணிவாசகங்கள்.

வருணம் பிறப்பை அடிப்படையாகக் கொண்டதன்று: குணத்தையும் கருமத்தையும் முன்னிட்டு மானுடர் நான்கு வருணங்களாகப் பிரிகின்றார்கள் என்று பகவான் கீதையில் பகர்கின்றாரேயன்றி குலத்தை முன்னிட்டுப் பிரிகின்றார்களென்று இயம்பவில்லை.

வருணபேதம் இயற்கையின் அமைப்பு. அதை முன்னிட்டு யாரையும் அலக்ஷியப்படுத்துவது அறிவுடையோர் செயலன்று. அவ்வாறே தொழில்களுள் வேறுபாடு கிடையாது. நான்கு வருணத்தார்களது தொழிலும் புனிதம் வாய்ந்தவைகளே! பள்ளிக்கூடத்தில் மேல்வகுப்புப் படிக்கிற மாணவனுக்குக் கீழ்வகுப்புப்பாடமும் தெரியும். வருணத்தில் மேல் படிப்புக்குப் போகின்றவர்களுக்கு ஆரம்ப நிலையில் இருப்பவர்களது தொழில் நன்றாய்த்தெரியும்.

—சித்பவாநந்தர்.

---

*முற்பக்கத் தொடர்ச்சி:-*

ணப்பனை இறைவன் ஆட்கொண்டான் என்னும் சரிதத்தால் மூட பக்தியின் வழிபாட்டிலும் பாவனையின் தன்மைதான் உயர்வு என்ற தத்துவம் விளங்குகிறது.

மேலே கூறப்பட்ட இரு முறை வழிபாட்டில் எது சிறந்தது? எது சிறப்பில்லை? என யோசிக்கத் தேவையில்லை அது அவரவர்கள் ஞானத்தாலும் உள்ளத்தின் பாவனைகளாலும் ஏற்றுக்கொள்ள வேண்டியவைகள்.

இன்று உருவ வழிபாட்டைக் குறைகூறித் தகாத முறைகளில் பிரசாரம் செய்யப் பட்டு வருகிறது அப்படிப் பேசப்படும். மேடைகளில் தலைவர்கள் படத்தை அலங்கரித்து மாலை போடுவதும் வணக்கம் செலுத்துவதும் அவர்களாலேயே நடத்தப்படுகிறது. படத்திற்கு என் மதிப்பு? மாலை? அதற்கு உயிரா இருக்கிறது? உம் ‘அது தலைவர் படம் என்கிறார்கள் நாம் இது இறைவன் திருவுருவம் என்றால் அவர்கள் பகுத்தறிவு ஒப்புக் கொள்வதில்லை அது என்ன கோளாறு அடைந்துள்ளதோ நாம் அறியோம். இத்தவறான உணர்ச்சிகளுக்கு இடந்தராமல் விழிப்புடன் இருப்பதுதான் சிறந்த முறையாகும்.

உண்மையின் முழு உருவத்தையும் காணுகிற ஆற்றல் மனிதனுக்குக் கொடுக்கப்படவில்லை. மனிதனுடைய கடமை என்னவென்றால், தான் கண்ட உண்மைக்கு ஏற்ப நடப்பது தான். அப்படி நடக்கும்போது, அவன் புனிதமான மார்க்கத்தை, அதாவது அஹிம்ஸா மார்க்கத்தைக் கைக்கொள்ள வேண்டும்.

—காந்தியடிகள்.

இவ்வுலகைப் படைத்த பெண், ஒரு சிறுமி என்று கற்பனை செய்து பாருங்கள். அவள் சிறு விளையாட்டாகவே இந்த உலகை படைத்திருக்க வேண்டும். அவள் முதலில் பல பெண்களைப் படைத்தாள் அப்பெண்கள் தம்மைப் படைத்த சிறுமியை அக்காள் என்றனர். அதன் பின் படைக்கப் பட்டவர்கள் தாய் என்றார்கள். இங்ஙனம் தாயாகவும் தமக்கையாகவும் விளங்குவதே தமிழகம்.

நம் வரலாறு மிகவும் நீண்டது. உலகின் முக்காற்பங்குச் செல்வம் இத்தமிழுலகில் இருந்தது. எந்த நாடு தமிழகத்தைச் சார்ந்திருந்ததோ. அந்த நாடே நாகரீகத்தில் நனிசிறந்து விளங்கியது. தமிழகம் நாகரீகவொளிபரப்பும் நற்கதிரோனகைப் பண்பாட்டில் மேம்பட்டுத் திகழ்ந்தது.

—கா.அப்பாத்துரைப்பிள்ளை.

நீ இறைவனுடைய கருணையைப் பெறவேண்டுமானால் அதற்கு வழி ஒன்று உண்டு. அது வெறும் வணக்கமும் வழிபாடும் மட்டுமன்று.

துன்ப முற்றுத் துடிக்கின்ற உயிர்களிடம் நீ கருணை செய். அவைகளின் துன்பத்தை நீக்கு, நீ பிற உயிர்களிடம் கருணைசெய்தால் கடவுள் உன்னிடம் கருணை செய்வார். கருணையால் கருணையைப் பெறலாம். இதனை ஒரு பொழுதும் மறவாதே.

—கிருபானந்தவாரி.

நினைவு நம் பிறப்பின் தனிச்சிறப்பு; ஆதலின் எண்ணத்தால் கண்டு கொண்ட முதல்வனை எண்ணத்தால் பெருக்கிக்கொள்ள வேண்டும். இறைவன் உள்ளப்பற்றினன்; நெஞ்சக்கேண்மையன்,



# ஆதிசங்கரர்.

(கே. எஸ். நாகராஜன்.)

*குரு ப்ரம்மா குரு விஷ்ணுர் குரு தேவோ மஹேஸ்வர*
*குரு ஸாக்ஷாத் பரப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:*

உயிர்கள் அனைத்தும் தாம் செய்யும் நல்வினை. தீவினைகளுக்குத் தக்கவாறு இன்பம் அல்லது துன்பம் ஆகிய பலனை அநுபவித்தே தீரவேண்டும். இங்ஙனம் வரும் பலன்களை அநுபவிக்க அவ்வுயிர்கள் பல பிறவிகளை எடுத்து உழலுகின்றன. இவ்வாறின்றி ஆண்டவனிடம் ஒடுங்கி. மறுபடி பிறவாதவாறு இருத்தலே வீட்டின்பம் எனப்படும். மறைகளில் மறைந்து கிடந்த இந்த இன்ப நெறியை விளக்கத் தோன்றியவரே சங்கரர். அவர் அறிவே உருவாய் அமைந்த அண்ணல். துன்பம் அகல மனிதர்க்குத் துணையாக நின்ற குரு கர்மத்தைக் கைவிடாதே என்ற கருணாமூர்த்தி. பேரானந்தத்திற்கு வழிகாட்டிய பேரருளாளர், அவர் காட்டிய இன்ப வழியே அத்வைத வேதாந்தமென்பது.

ஆன்மாவும் ஆண்டவனும் ஒன்றே. இவ்விரண்டினையும் வெவ்வேறாகக் காண்பது நம் தவறு. அவ்வாறு காணக்காரணமாய் இருப்பது அஞ்ஞானம். அது நீங்கி மெய்ஞ்ஞானம் கிட்டும் போது. இரண்டற்ற—ஒன்றே—என்ற—தத்துவம் விளங்கும். இதுவே அத்வைத வேதாந்தத்தின் அடிப்படை. ஆனால் சங்கரர் "ஞானிக்கு துவைத

---

*முற்பக்கத் தொடர்ச்சி:-*
நெஞ்சு கலவா வழிபாடு எல்லாம் ஆகுல நீர்மையன; ஓராற்றான், ஊனரை ஏய்க்கப் பிறந்தன.

'உள்ளுவார் உள்ளத்தே உறைகின்றானை' எனவும், 'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்' எனவும், 'என்னுடைய சிந்தையே ஊராகக் கொண்டான் உவந்து' எனவும், 'இருப்பேன் என்று என் நெஞ்சு நிறையப் புகுந்தான்' எனவும் தமிழ் அருட்பெருமக்கள் வலியுறுத்தும் நெஞ்சக்களத்தை நினைக.

இறைமை வளர்க்கும் கருவி நினைவல்லது பிறிதில்லை.

—சுப. மாணிக்கம்

மில்லை அத்வைதமே" என்று பிரசாரம் செய்து வந்தாரேயொழிய, சாதாரண மக்கள் துவைதத்தில் தான் இருக்கவேண்டும் என்று பன் முறை ஆணையிட்டுள்ளார்.

சிறுவயதாய் இருந்த போது சங்கரர் ஒரு நாள் தன் தாயாருடன் குளத்தில் நீராடச் சென்றார். ஒரு முதலை அவரைப் பற்றிக் கொண்டது. உடனே அவருடைய அன்னையார் புலம்ப ஆரம்பித்தார் உடனே சங்கரர் 'அன்னையே' எப்படியும் நான் உயிர்தப்புவது கடினம்; என்னை நீ இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது, இப்பொழுதாவது எனக்குச் சன்னியாசம் வாங்கிக் கொள்ள உத்தரவு கொடுங்கள்' என்று கேட்டார். அன்னையார் அனுமதி அளித்தார். என்ன விந்தை! சங்கரரை முதலை விட்டுச் சென்றது. அவர் உயிர் தப்பிக் கரைக்கு வந்து சேர்ந்தார். அன்னையின் அனுமதி பெற்றதும் சங்கரர் மானஸீகமாக சந்நியாஸம் அடைந்தார். அதாவது, நான் எனது என்னும் உணர்வுகளை ஒழித்து ஆண்டவனிடம் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். இவ்வாறு செய்யுமுன் இருந்தது தன்னலப்பற்று. அதனால் விளைந்தது அச்சம். சந்நியாசத்திற்குப் பின் அடைந்தது ஆண்டவனிடம் சரணடைந்த நிலை. அதனால் விளைந்தது இன்பம். இச்சம்பவத்தால் காவித்துணி வேண்டா, கற்றைச் சடை வேண்டா, பாவித்தல் போதும் பரமநிலை எய்துதற்கு என்பதும் புலனாகின்றன. மேலும் துறவு நெறி நின்றார்க்குக் கைகூடாத காரியமில்லை யென்பது விளங்குகிறது. இக்கருத்தையே யன்றோ 'தன்னலப் பற்றை நீக்கு. நான், எனது என்னும் உணர்வின்றிஎன்னை முற்றும் சரணடை. மனக்கட்டுமானங்களை உதறித்தள்ளு. யான் உன்னைத் தீமையினின்றும் காக்கிறேன். அஞ்சற்க'' என்று பாஞ்சஜன்யத்தின் முழக்கமாக கண்ணன் வெளியிடுகிறான்.

சங்கரர் காசியில் இருந்தபோது ஒரு நாள் தன் சீடர்களுடன் கங்கைக்கு நீராடச்சென்றார். செல்லும் வழியில் ஒரு சண்டாளன் எதிரே வந்து கொண்டிருந்தான். அவனைக்கண்ட சங்கரர், தம் மலையாள நாட்டு வழக்கப்படி 'தூர விலகு' என்று கூவினார். அதைக் கேட்ட சண்டாளன், "யாரைத் தூர விலகச்சொன்னீர்? ஏன் விலகச்சொன்னீர்? ஆத்மாவுக்குத் தீட்டுண்டோ?'' என்று கேட்டான் உடனே சங்கரருக்கு உண்மை புலப்பட்டது. 'பேருண்மையைப்



போதித்த நீயே எனக்கு குரு' என்று சொல்லி அவனை வணங்கினார் சங்கரர். உடனே "மநீஷா பஞ்சகம்" என்ற ஐந்து அழகான சுலோகங்களைப்பாடினார். இச்சம்பவத்திலிருந்து, **எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும், அப்பொருளில் மெய்ப்பொருள் காண வேண்டும் என்பதும் உண்மையை அறிவுறுத்துவோர் எவராயினும் அவரை நாம் குருவெனப் போற்றுதல் வேண்டும் என்பதும் தெளிவாகின்றன**

சங்கரருடைய சீடர்களுள் ஒருவர் பத்மபாதர் என்பவர். அவர் காவேரி நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார் அங்கு அவருடைய தாய் மாமன் ஒருவர் இருந்தார். அவருக்கு சங்கரர் போதித்து வந்த ஞான மார்க்கத்தில் நம்பிக்கையில்லை. கர்மமே ஆண்டவனை அடையப் போதுமானதும் சிறந்ததுமான வழிஎன்று உறுதி கொண்டவர் அவர். பத்மபாதர், தம்முடன் சில ஞானமார்க்க நூல்களை எடுத்து வந்திருந்தார். அவர் தம்மாமனுடன் தங்கி இருந்த போது, ஒருநாள் இரவு எவரும் அறியாதவாறு அவருடைய நூல்களனைத்தையும் பெரியவர் அழித்து விட்டார் மறுநாட்காலையில் பத்மபாதர் தம் நூல்களைத் தேடிப் பார்த்தார். எங்கும் காணவில்லை. அவற்றைப்பற்றிய செய்தி சொல்வாருமில்லை. மனமுடைந்த அவர் நேரே மலையாள நாட்டுக்குச் சென்று சங்கரரிடம் முறையிட்டார், சங்கரர் தம் தவவலிமையால் அந்நூல்களில் இருந்ததை யெல்லாம் எடுத்துக்கூற, பத்மபாதர் தவறாமல் எழுதிக் கொண்டார் இதனால், நமக்கு ஒரு கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால், அதன் உறைவிடங்களெனக்கருதும் நூல்களை அழிப்பதாலோ, அக்கொள்கையைப் பின்பற்றுவோரை வெறுப்பதாலோ பயனில்லை என்பது தெரிகிறது, விரோதம் அல்லது எதிர்ப்பை தவறாக எண்ணிக்கொண்டு விரோதியை அல்லது எதிர்த்தரப்பாரை அழிக்கிறோம். விரோதியை அழிக்கலாம், விரோதம் மூற்றும், இதனால் விரோதத்தின் சக்தி அழியாது, நன்மை விளையாது.

(தொடரும்)

# கௌரியம்மையார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே மேல்நாட்டு நாகரீகத்தின் தாக்குதலாலும் ஆங்கிலக் கல்வியின் பரவுதலாலும், இந்தியர்க்குத் தமது ஞான லெக்ஷியத்தில் நம்பிக்கையும் ஊக்கமும் குறைந்துவர நேர்ந்தன. நாட்டின் ஞானவாழ்க்கைக்கு ஒருபெரும் முட்டுப்பாடு உண்டாகும் தருவாய் அணுகியது. அவ்வமையம் அதுவரை நாட்டில் தோன்றித் திகழ்ந்த ஞான குரவர் அனைவரும் திரண்டு ஒருருவெடுத்து வந்தது போன்று, அவித்தை இருளை அறவே பருகி உலகெங்கும் ஞானவொளியை வீசியெழும் ஞான சூரியனைப் போன்று, ஸ்ரீராமகிருஷ்ணர் அப்புண்ணிய பூமியிலே அவதரித்தார். ஞானலெக்ஷியங்கள் அனைத்திற்கும் வடிவமாய் இலங்கினார். 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து,' உவப்பிலா ஆனந்தமாய தேனினை வற்றாத அருவிபோலச் சொரிந்தார். மலரை நாடும் வண்டுகளைப்போல ஞானதாகம் தலையெடுத்த சீடர் பலரும் அவரைநாடி, தமது அவா நிறைவெய்தப் பெற்றனர். ஆட்கொள்ளப் பெற்ற ஆண்களும் பெண்களும், அவரை அவதாரமெனவே வழிபட்டு வந்தனர். அவரது அடியார்களிற் சிலர் தமது வாழ்க்கைகளை அக்குருதேவரது திருவடியிலே காணிக்கையாகச் சமர்ப்பித்து விட்டு, அவரது ஆணையால் தாம்பெற்ற பேற்றை உலகத்தார்க்கு வழங்கும் தொண்டிலே சதா ஈடுபட்டு வாழலானார். இத்தகைய அடியார்களுள் ஒருவர் **கௌரிபுரிதேவியார்**. இந்நங்கையார் தமது ஞானத்தாலும், தீரத்தாலும் துறவாலும், அறிவாலும், தொண்டாலும், விழுமிய ஒழுக்கத்தாலும் மங்கையர்க்கரசியாய், தற்கால இந்தியமாதர்க்கு இலக்ஷியமாய் மிளிர்கின்றார். இவரது பூத உடம்பு மறைந்துவிட்டதெனினும் புகழுடம்பு பலர்க்கும் ஞான ஊக்கத்தைப் பொழிவதாகின்றது. இவரது சிந்தைக்கினிய வரலாறு இனிக் கூறப்படுகின்றது.

## பிறந்தவாறும் வளர்ந்த வரலாறும்.

கௌரியம்மையார்க்குப் பெற்றோரிட்டபெயர் மிருடானி. அது பார்வதியின் பெயர்களுள் ஒன்றாகும். அவரது தந்தையாரான பார்வதி சரண சட்டோபாத்யாயர் கல்கத்தாவிற்கு மேற்கே ஹௌராவுக்கு அருகேயுள்ள ஸிட்பூரில் வாழ்ந்த ஒரு வைதிக பிராமணர்.



அவர் நாடோறும் முறைவழுவாது கடவுளை வழிபட்டு வருவார். அவரது நெற்றியிலேசந்தனக்குறிப்பைக்கண்ட அவரதுஅதிகாரியொருவர் அவரை ஒருநாள் கண்டித்ததாகவும், அதற்கு எதிராகத் தாம் தமதுதொழிலை இழப்பினும் சமயச்சடங்குகளைக் கைவிடவிரும்பாத உறுதியைக் கூறியதாகவும் சொல்வார். மிருடானியின் அன்னையார் கிரிபாலாதேவியார் கல்வியறிவும் தெய்வபக்தியும் ஆற்றலும் வாய்ந்தவராய் இருந்தார். வங்காளமொழியிலும் வடமொழியிலும் அவர் பாடிய பாடல்கள் புத்தக வடிவாக வெளிவந்தன. பாரசீகமொழியும், ஆங்கில மொழியும் சிறிதுஅறிந்திருந்தார். அவர் இரவில் காளிதேவியைச் சிரத்தையோடு வழிபடுவார். இந்துசமய நோன்புகளைத் தவறாது அனுசரிப்பார். இவ்வகையான ஞான சாதனங்களின் பயனாக அவருடைய நெஞ்சிலே அமைதியும், இறைவியையே புகலாகப்பற்றும் இயல்பும் குடிகொண்டன. இளம் வயதில் அவர் தமது முதற்சேயை இழந்தபோது இவ்விரண்டு குணங்களும் சோகத்தால் கலங்கவிடாது மனத்தைப்பாதுகாத்தன. சில ஆண்டுகட்குப்பின்னர் ஒருநாட் கனவில் தேவியே மகிழ்பூத்த முகத்தோடு தமக்கு ஓர் அழகிய குழந்தையை ஈந்ததாகவும், அதைப்பிரசாதமாகப் பணிவோடும் நன்றியோடும் ஏற்றுக்கொண்டதாகவும் காட்சி பெற்றார். அக்காட்சிக்கிணங்க சுமார் 1858ஆம் ஆண்டில் அவரது நாலாவது குழந்தையும் இரண்டாவது புதல்வியுமாக மிருடானி பிறக்கலானாள்.

கிரிபாலா தேவியார் கல்கத்தாவைச் சார்ந்த பவானிபூரிலே தமது தாய்வழியாக வந்த சொத்துக்களை மிகத்திறமையோடும் செவ்வையாகவும் ஆண்டு கொண்டு வாழ்ந்துவந்தனர். குழந்தைக்கு வயது ஐந்தாயதும், அவட்கு கல்வி அறிவை ஊட்டும் பொருட்டு அருகிருந்த ஒரு பெண் பாடசாலைக்கு அன்னையார் அனுப்பிவைத்தார். மிருடானி தனது அறிவாற்றலால் பள்ளியில் முதன்மையாக விளங்கியதுமன்றிப் பலராலும் புகழப்பெற்றார். ஆயினும் கிறிஸ்தவரது சார்பு பள்ளிச்சாலையில் மேம்பட்டு நின்றமையால், இந்துமதச்சிறுமியர்க்குத் தம்மதத்தின் மீதிருந்த பற்றை நசுக்கிவரத்தலைப்பட்டது.

இதனைப்பொருத மிருடானி தனக்கு அத்தகையகல்வியின் மாட்டுள்ள அருவருப்பை வெளியிடக்கருதி, அப்பாடசாலைக்குச் செல்லுதலைத்தவிர்த்தாள். சிறுவயதிலேயே இவ்வளவிற்குச் சுதந்திர இச்சை அவளிடம் எரிந்துகொண்டிருந்தது. பள்ளிக்கூடப் படிப்பு நின்றுவிட்டபோதிலும் வீட்டுப்படிப்பு குறைவின்றி நடந்து வரலாயிற்று. போதிய வடமொழிப்பயிற்சியைக் கல்விச்சாலையிற் பெற்றிருந்தமையால், இல்லத்திலே கீதை, சண்டி, இராமாயணம், பாரதம் இவற்றை வாசிக்கலானாள். தனது குறைவற்ற ஞாபகசக்தியால் அந்நூல்களினின்றும் பலபகுதிகளை மனப்பாடம் பண்ணியிருந்தாள். பின்னாளில் ஞானசாஸ்திரங்களிலும் ஆழ்ந்த பயிற்சியையும் பெற்றிருந்தாள். இல்வாறுபெற்ற ஞானநூற் கல்வியும் இயல்பாயமைந்திருந்த ஞானச் சார்பும் – இவ்விரண்டுமே அவளது பிற்கால வாழ்வில் அரும்பி மலர்ந்து காய்த்து மெய்ஞ்ஞானக் கனியை அளிக்கலாயின.

அவளது உள்ளத்துப் புகைந்து கொண்டிருந்த ஞானத்தீயைத்தமது சம்பாஷணையால் ஊதிக் கிளரச்செய்து, தமது விழுமிய ஒழுக்கத்தால் நெய்வார்த்து வளர்த்தவர், அவளது உறவினராகிய சண்டி சரணமுகோபாத்யாயர் என்பார். இம்முதியார் முதிர்ந்த ஞானச்செல்வரெனப் பலராலும் போற்றப்பட்டார். இவர் தமது ரேகை சாஸ்திர அறிவால் மிருடானி உலகைத் துறப்பது திண்ணம் என அவளது இளம் பருவத்தும் முன்னுணர்ந்து கூறினார், பலப்பல தலங்கட்கும், தீர்த்தங்கட்கும் முறையாகச்சென்றிருந்த அவர் அச்சிறுமிக்குத் தமது யாத்திரையைப் பற்றியும் தாம் ஆங்காங்கே கண்ட விநோதங்களைப்பற்றியும் ஊக்கங்கிளர எடுத்துரைப்பார். அதனை ஆவலோடு ஊன்றிக் கேட்கும் போதே, யாத்திரை வாழ்க்கையில் ஆசையும் இமய மலையின்மீது கவர்ச்சியும் அவளது உள்ளத்தில் தாமாக எழலாயின. அவை ஞானச்சார்பு முளையைக் கிளம்பச்செய்ததுமன்றி, தீரச்செயல்களிலும் இயற்கை வனப்பிலும் உள்ள விருப்பையும் தோற்றுவித்தன.

இளமையில் பூத்த வேறு சில குணங்களின் நறுமணமும் அச்சிறுமியிடம் கமழ்ந்தது. இல்லாமையை யாரிடத்தேனும் காணின், அவளது நெஞ்சத்துப் பரிவு பொங்கும். அதனால் அவள் கையிற்கண்டதை அவர்க்குக் கொடுப்பதைத் தடுக்க எவராலும் இயலாது. இல்லையெ



# செய்தித்திரட்டு.

**திருவள்ளுவர் திருநாள்:-**

இந்த ஆண்டின் திருவள்ளுவர் திருநாள் வைகாசித்திங்கள் 5ஆம் நாள் (18–5–54) ஆகும். இவ்வாண்டு மத்தியமாகாணத் தமிழ்ச்சங்க ஆதரவில் கண்டியில் கொண்டாடப்படும் என்று கொழும்பு தமிழ் மன்றக் கழகத் தலைவர் அறிவிக்கின்றார்.

வள்ளுவன் வாக்கு வழங்குக உலகெலாம்,

**பதுளை சைவபரிபாலன சங்கம்:-**

ஷை சங்க வருடாந்தக்கூட்டம் 27–2–54ல் நடைபெற்றது. 1954ஆம்ஆண்டு விஜயதசமியிலன்றுஇந்துக்கல்லூரி ஒன்றை ஸ்தாபிப்பதாகத் திட்டமிட்டுள்ளது. இந்து ஆலய பரிபாலன மசோதாவைச் சட்டமாக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுவதாகவும் பதுளையிலுள்ள பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் பலர் நீக்கப்படுவதைத் தடுப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யுமாறு கல்விமந்திரியைக் கேட்டுக் கொள்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

முற்பக்கத்தொடர்ச்சி:-

னவந்தடைந்தார்க்கு இல்லையெனும் மொழியைக் கூற விரும்பாள். வெறுங்கையோடு அவரை அனுப்புதற்கு இசையாள். உணவிலும் விளையாட்டிலும் உடையிலும் அணியிலும் அவளுக்குப் பிரியம்உண்டாகாது. இறைவனது பெயரை ஓதக்கேட்டலும், அவளது மனம் சாந்தமடையும்; கோபம் தணியும், அழுகை அடங்கும். தெய்வபக்தியே அவளது வாழ்க்கைக்கு ஆணிவேராயிற்று. புலாலுணவில் வெறுப்பு குழந்தைப்பருவ முதலே இருந்தது. சிறுவரைப்போல் ஆடியும் பாடியும் ஓடியும் சாடியும் இச்சைப்படி திரியாதும், அடங்கி யொடுங்கி அமைதியாயிருப்பாளெனினும், எடுத்ததை நிலைநாட்டும் மனவுறுதியும் அதனோடு சமயத்திற்கேற்ப வளைந்து கொடுக்கும் இயல்பும் அச்சிறுமியிடம் உறைந்தன. (தொடரும்)

## சிவராத்திரி தினத்தில் நாமலிகித ஜெபம்.

3-3-54ல் நடைபெற்ற சிவராத்திரி தினத்தின் போது பல அன்பர்கள் ஆங்காங்கு ஸ்ரீ பஞ்சாட்சரத்தை எழுதும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை மிகமகிழ்வுடன் அறியத்தருகிறோம். பல பாடசாலைகள் பங்கு பற்றியது பெரிதும் குறிப்பிடத்தகுந்தது. ஸ்ரீ பஞ்சாட்சரத்தை மன ஒருமையோடு ஒருமுறை எழுதும் போது மானசிகமாக ஐந்துமுறை உச்சரிக்கப்படுகிறது. மனம் லயம் அடைவதற்கு மிகச் சிறந்தவோர் மார்க்கம். நாள்தோறும் குறிப்பிட்ட ஒரு நேரத்திலே 200நாமங்களுக்குக் குறையாது எழுதிவந்தால் சில மாசங்களில் அதனுடைய சக்தியை நீங்களாகவே உணருவீர்கள். இலௌகிக வாழ்க்கையில் லட்சாதிபதியாகவோ கோடீஸ்வரனாகவோ வருவதற்குப் பலர் விரும்புகிறார்கள். ஆனால் கோடியில் ஒருவர் தானும் அப்படி வருதல் மிகக் கடினம். கோடீஸ்வரனுடைய அரைஞாண் தானும் அவனுடன் கூடிச் செல்லாது.

ஆத்மீகத்திலே நீங்கள் மனம் வைத்தால் மிக இலகுவாக லட்சாதிபதியாகவோ கோடீஸ்வரனாகவோ ஆகிவிடலாம். ஒரு லட்சம் நாமம் எழுதி விட்டீர்களானால் நீங்கள் ஆண்டவன் அருகிலே தவறாது ஒரு லட்சாதிபதியாகவே இருக்கலாம். கோடி நாமம் எழுதி விட்டீர்களானால் ஈசனோடு சமமாக கோடீஸ்வரனாகவே எப்போதும் விளங்கலாம். இத்தேட்டம் தவறாது உங்களுடன் வந்தே தீரும். இலௌகிகத்தில் எடுக்கப் படுகிற முயற்சியில் ஆயிரத்தில் ஒருபங்கு முயற்சி செய்தால் நீங்கள் ஒவ்வொருவரும் தவறாது ஆத்மீகலட்சாதிபதியாகவோ ஆத்மீக கோடீஸ்வரராகவோ விளங்கலாம்.

ஆன்ம வளர்ச்சிக்காக இன்றுவரை யாது செய்துள்ளீர்கள் என்று ஒவ்வொருவரும் உங்களை நீங்களே கேட்டுப்பாருங்கள். உடலுக்காக உள்ளத்துக்காக எவ்வளவெல்லாம் பாடுபட்டீர்கள். நாம் உடலா? அன்று; உள்ளமா? அதுவுமன்று. நாங்கள் ஆத்மாக்கள் இந்த நினைவு ஒவ்வொருவரையும் விட்டு நீங்காதிருத்தல் வேண்டும்.

நமச்சிவாய வாழ்க!

### நாமலிகித ஜெபத்தில் பங்குபற்றியோர் விபரமும் தொகையும்

| | | |
|---|---|---|
| நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி மாணவர்கள் | 96பேர் | 1 83, 306நாமம் |
| பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை மாணவர்கள் | 76பேர் | 2 03, 836 நாமம் |
| வெள்ளவத்தை சைவமங்கையர்கழக மாணவிகள் | 91பேர் | 2 09, 835 நாமம் |
| அக்கரைப்பற்று ராமகிருஷ்ண வித்தியாலய மாணவர்கள் | 12பேர் | 32, 957 நாமம் |
| ருகலை அரசினர் பாடசாலை மாணவர்கள் | 7பேர் | 16, 469 நாமம் |
| கல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை மாணவர்கள் | 28பேர் | 41, 559 நாமம் |
| தம்பலகாமம் ஸ்ரீ சாரதா வித்தியாலைய மாணவர்கள் | 32பேர் | 12, 532 நாமம் |
| பதுளைச் சரஸ்வதி வித்தியாசாலை மாணவர் | 27பேர் | 5, 896 நாமம் |
| தனிப்பட்டமுறையில் | 60பேர் | 2 73, 636 நாமம் |
| ஆக மொத்தம்:- | 429பேர் | 9 80, 026நாமம் |

ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி

---


### ஆத்மஜோதி நிலையத்தில் ஆத்மீக நூல்கள் விற்பனைக்குண்டு.

சுவாமி சுத்தானந்த பாரதியார் சுவாமி சித்பவானந்தர் போன்றவர்களின் புதிய பதிப்பு நூல்கள் கைவசமுண்டு.

| | | |
|---|---|---|
| திருமந்திர விளக்கம் | சுத்தானந்தர் புதிய பதிப்பு | 2-50 |
| நமது சமய விளக்கம் | ,, ,, | 25 |
| இன்பத் திருப்புகழ் | ,, ,, | 50 |
| பகவத் கீதை | சித்பவானந்தர் விரிவுரை | 9-00 |
| எதிர்கால இந்தியா | ,, | 1-50 |
| கயிலைமலை யாத்திரை | ,, | 1-00 |
| அறம்வளர்த்த நம்பி | ,, | 1-00 |
| அருட்செல்வம் | | 2-00 |
| கீர்த்தனாஞ்சலி | | 3-50 |
| யோகசித்தி | | 3-00 |
| அருட்பெருமான் | | 25 |
| ஜோதி தரிசனம் | | 20 |
| ஸ்ரீ சிவானந்த திக் விஜயம் | | 7-00 |
| பஜன் கீர்த்தன் | | 1-75 |

வேறுநூல்களுமுண்டு. தபாற்செலவு தனி

விபரம் வேண்டுவோர் பின்வரும் விலாசத்திற்கெழுதுக,

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (சிலோன்).

---

### தியானத்திற்கும் பூஜைக்கும் சிறந்த படங்கள்

குமரகுருபரன் படம் 1 ரூ. 1-75 பாலசுப்பிரமணியர் படம் ரூ, 2-50

நால்வர்படம் ரூ. 1-50 சுத்தானந்தர் போட்டோ ரூ, 3,50

வி. பி. பி. தபால்செலவு வேறு


சரவண அச்சகம் நாவலப்பிட்டி

Regd. at the G. P. O. as a News Paper H. C. 59-300

## திரு. வி. க. நிதி

| | |
|---|---|
| முன்கணக்கின்படி | 142—00 |
| திரு. அ. சுப. சுப்பிரமணியம் செட்டியார் | 25—00 |
| ,, சுப. கனகசபை | 10—00 |
| ,, ப. சா. சீனிவாசன் | 10—00 |
| ,, உ. அ. உகராம | 10—00 |
| ,, பெரி. சிவனடியான் | 5—00 |
| ஆகமொத்தம் | 202—00 |


# விஞ்ஞானி

மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

தனிப்பிரதி சதம் 50.

வருடச்சந்தா ரூபா 6/-

வி ஞ் ஞா னி

விஞ்ஞானத்திற்கென்றே

முழுவதும் இடமளிக்கும்.

சந்தாதாரர்களுக்குப் பலவிதமான

சௌகரியங்களுண்டு இனாம்களுண்டு

பிரவேசக்கட்டணமில்லாத

விஞ்ஞான அறிவுப்போட்டி.

எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

உங்கள் அன்பன்

*வி. சுப்பிரமணியம்.*


சரவண அச்சகம், நாவலப்பிட்டி